# தக்கர் பாபா வித்யாலயா



காந்தி இன்று எவ்வாறு நம்மோடு வாழ்கிறார்? இந்தியாவில் வசிக்கும் ஏறத்தாழ 132 கோடிக்கும் மேலான மக்கள் தொகை தாங்கள் உபயோகப் படுத்தும் பல வகையான இந்திய ரூபாயின் மூலம் காந்தியின் உருவபடத்தைப் பார்க்கின்றனர். அவ்வளவே! ஆனால் நம்மில் எத்தனை பேர் அவரின் போதனைகள் இன்று நடைமுறையில் இருப்பதை அறிவோம்? இதைத் தெரிந்துக் கொள்ள, நம் சிங்கார சென்னையில் நந்தனத்தில் ஒரு பெரிய வளாகத்தினுள் வரிசையாக சிறு கட்டிடங்களை உள் கொண்ட நுழைவாயிலில் ‘‘தக்கர் பாபா வித்யாலயா - தொழில்துறை பயிற்சி மையம்; 1993-ல் மகாத்மா காந்தியால் நிறுவப்பட்டது’’ என்ற வளைவைத் தாங்கி இருக்கும் இடத்துக்கு நாம் செல்ல வேண்டும்.

உள்ளே நுழைந்தவுடன், மகாத்மாவால் புனையப்பட்ட பளிங்கு அடிக்கல், ராஜாஜி திறந்து வைத்த ஆண்கள் விடுதி பற்றிய தகடு, அடிக்கல் நாட்ட காந்தி பயன்படுத்திய கொல்லறு மற்றும் பளபளக்கும் கைராட்டினம் ஆகியவற்றைக் காணலாம். மகாத்மாவின் உறுதியான வழிப்பாதையோடு அவரின் கொள்கைகளைக் கொண்டும் இந்த மையம் நடத்தப்படுவதையும் காணலாம், என்று கூறுகிறார் இந்த மையத்தின் செயலாளர் திரு. மாருதி அவர்கள்.


இந்த நிறுவனம், ‘தேசிய மன்றம் - தொழிற்கல்வி பயிற்சி’யால் அங்கீகரிக்கப்பட்ட மின்சாரவியலாளர், பொருத்துனர், வயர்மேன் போன்ற தொழிற்கல்வி வகுப்புகள், ‘மாநில மன்றம் - தொழிற்கல்வி பயிற்சி’யால் அங்கீகரிக்கப்பட்ட தச்சுகலை, குளிர்சாதன கைவினைஞர் போன்ற தொழிற்கல்வி வகுப்புகள், மற்றும் அவர்களின் வெல்டிங், தையல்கலை, இதர மென்திறன் பயிற்சி வகுப்புகள் ஆகியவற்றை நடத்துகிறது. ஒவ்வொரு வருடமும் குறைந்தது 200 மாணவர்களாவது இங்கே சேர்கின்றனர். இவர்கள் தினக்கூலி வாங்கும் குடும்பத்திலிருந்து வந்தவர்கள். இங்கு நடத்தப்படும் கட்டுப்பாடான பயிற்சியால், இந்த மாணவர்கள் குறுகிய காலத்தில் அவர்களின் அத்தியாவசத் தேவைக்கு சம்பாதிக்க அவர்களைத் தயார்படுத்துகிறது. தேர்ந்த பணியாட்களின் தேவை அதிகமாகும் நிலையில், தக்கார் பாபாவின் மையத்திற்கு ஒவ்வொரு வருடமும் மாணவர்களை தேர்வு செய்ய தொழிற்சாலைகள் இந்த நிறுவனத்தை நாடி வருகின்றன.

இந்த வளாகத்தில் ஒரு ஆரம்பப்பள்ளி, வேலைக்கு செல்லும் பெண்களுக்கான விடுதி, ‘வினோபா கூடம்’ எனும் அரங்கம், சுதந்திரத்துக்கு முன் காலத்தைப் பற்றி சொல்லும் பல விதமான புத்தகங்கள், இதழ்கள் கொண்ட நூலகம் இருக்கும் காந்தி கல்வி மையம் உள்ளது.

இந்த நிறுவனத்தை பற்றி மேலும் அரிதான விஷயங்களை அறிந்துக் கொள்ள தக்கார் பாபா சமிதியின் தற்போதைய தலைவர் திரு. பாண்டியன் மற்றும் செயலாளர் திரு. மாருதி அவர்களைச் சந்தித்து பேசினோம்.

அவர்கள் சொல்லியதில், காந்திஜி அரிஜனங்களுக்கு கல்வி கொடுக்க வேண்டும் என்பதில் தீவிரமாக இருந்தார் என்று தெரிந்தது. அவர் காலத்தில் அரிஜனங்களுக்கு சம உரிமை கிடையாது. எனவே காந்திஜி அவர்களைத் தயார்படுத்தி சமுதாயத்தில் சம உரிமை கிடைக்கச் செய்து, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை சிறக்க வைக்க வேண்டும் என நினைத்தார். வழக்கமான பள்ளிக் கல்வியைவிட, தொழிற்கல்வி பயிற்சி தான் வருங்காலத்திற்கு நல்லது என்பது காந்திஜியின் பார்வை.

1933-ல் திரு. துரைக்கண்ணு முதலியார் அவர்களின் உபயத்தால் சென்னை கோடம்பாக்கத்தில் தொழிற்கல்வி பயிற்சி பள்ளி ஒன்று ஆரம்பிக்கப் பட்டது. இந்த பள்ளி வறுமைக்கோட்டுக்கு கீழிருக்கும் மாணவர்களுக்கு தொழிற்கல்வி பயிற்சி கொடுக்க ஆரம்பித்தது. தற்போது நந்தனத்தில் இருக்கும் பயிற்சிகூடத்தின் நிலம் 1946-ல் வாங்கப்பட்டு,









புது கட்டிடத்திற்கான அடிக்கல்லை மகாத்மாவே நாட்டினார். தொழிற்கூடங்களும், வகுப்பறைகளும் கட்டப்பட்ட பிறகு கோடம்பாக்கத்திலிருந்த தொழிற்பள்ளி நந்தனத்துக்கு மாற்றப்பட்டது காந்திஜியின் ஆலோசனைப்படி அரிஜனமக்களின் முன்னேற்றத்திற்காக உழைத்த உயர்ந்த மனிதர் தக்கர் பாபாவின் பேரிலேயே இந்த பள்ளிக்கு 'தக்கர் பாபா வித்தியாலயா' என்று பெயரிடப்பட்டது. தக்கர் பாபா, மும்பை மாநகராட்சியில் தலைமை பொறியியாளராக பணி செய்யும் போது, அரிஜன மக்கள் எதிர்கொள்ளும் இன்னல்களைப் பார்த்து அவர்களுக்காக சேவை செய்ய ஆரம்பித்தார். இது அவர் காந்தியை சந்திப்பதற்க்கு முன்பே ஆகும். தக்கர் பாபா தன் வாழ்க்கையையே வாடுகின்ற மக்களின் உயர்ச்சிக்காக பாடுபட்டதால், அவர் பெயரில் பள்ளிக்கூடம் இருப்பதே சரி என்று காந்திஜி நினைத்தார்.

பாஷ்யம் ஐயங்கார், ராஜாஜி, எல்.என். கோபால்சாமி, வைத்யநாத ஐயர் மற்றும் இன்னும் சிலர் சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்டதோடு சமூக நலப்பணிகளிலும் தம்மை ஈடுப்படுத்திக் கொண்டனர். இவர்கள் அரிஜன சேவா சங்கத்தில் இருந்ததால், இந்த சங்கத்தின் ஒரு பிரிவாகவே தொழிற்கல்வி பள்ளி தொடங்கப்பட்டது, தக்கர் பாபா வித்யாலயா ஒரு அறக்கட்டளையின் பிரிவாக இருந்து பின்னர் பதிவு செய்யப்பட்டது.

செயலாளர் திரு. மாருதி அவர்கள் சமீபத்தில் டிசம்பர் 2015-ல் வந்த பெரும் வெள்ளத்தில் இந்த பள்ளி 6 - 8 அடி தண்ணீரில் மூழ்கியதும் அதனால் அடைந்த அளவிளா பாதிப்பையும் நினைவு கூர்ந்தார். ஆனால் இந்த பேரழிவு, துக்கத்தில் ஒரு ஆசீர்வாதமாக பழைய கட்டிடங்களைப் புதுப்பிக்க வழி வகுத்தது. பள்ளியின் முன்னாள் மாணவர்கள், அக்கம் பக்கம் வசிப்பவர்கள், பெரிய நிறுவனங்கள், அரசு சாரா அமைப்புகள் என உதவிகள் பல தரப்பிலிருந்து வந்தன. தனி மனிதர்களிடமிருந்து வந்த உதவி பெரியதாக இல்லை எனினும், இந்தப் பள்ளியுடன் அவர்கள் கொண்டுள்ள உணர்வுபூர்வமான பற்று இருந்தது. சில முன்னாள் மாணவர்கள் கட்டிடத்தைப் முன் போல் செயல்பாட்டுக்குக் கொண்டு வர உதவி புரிந்தனர். சில தொகுதிகளைப் புதுப்பிக்க வைக்கப்பட்ட பொதீடு 16 லட்சத்திலிருந்து 70 லட்சமாக உயர்ந்தது. எப்படி இவ்வளவு பெரியத் தொகையை சமாளிப்பீர்கள் என்று கேட்டதற்கு திரு. மாருதி ஒரு துணுக்கு செய்தியை பதிலாக அளிக்கிறார்.

ஒரு முறை காந்திஜியின் ஆசிரமத்திற்கு பெருமளவில் அரிஜனங்கள் வருகை தந்தனர். இதை விரும்பாத உபயதாரார்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். வைப்பு நிதி குறைந்து கொண்டே வந்ததைக் கண்ட ஆசிரமவாசிகள் செலவுகளை எப்படி சமாளிப்பது என்று கவலைக் கொண்டனர். ஆனால் காந்திஜி அமைதியாக காணப்பட்டார். வருகை தந்துள்ள அரிஜனங்களை போக சொல்ல முடியாது என்றும், உதவும் உள்ளங்கள் நிச்சயம் உதவுவார்கள் என்றும் கூறினார். அன்று இரவு ஆசிரமத்தின் வாசலில், அநாமதேய நன்கொடையாளர் ஒருவரால் வைக்கப்பட்ட ஒரு மூட்டை பணமும், மளிகைப் பொருட்களும் இருப்பதை ஆசிரமவாசிகள் கண்டனர்.

ஒரு நல்ல விஷயம் அதற்கான தேவையை அதுவே தேடிக்கொள்ளும் என்று காந்திஜி கூறினார். உண்மையான காந்தியனின் உள்ளத்தில் காந்திஜி தாக்கத்தை எற்படுத்தினார் என்பதற்கு இதுவே ஒரு சான்றாகும்.

ஒரு நடைமுறைத் தீர்வு எப்படி ஒரு பெரிய மாற்றத்தை கொண்டு வரும் என்பதற்கும், இக்கட்டான காலத்திலும் தளராமல் நிமிர்ந்து நிற்பதற்கும், தக்கார் பாபா வித்யாலயா ஒரு முன் உதாரணமாக விளங்குகிறது. ஒரு தொலைநோக்கு பார்வை நிச்சயம் ஒரு தீர்வுக்கு வழி வகுக்கும். ஆனால் அதை செயற்படுத்தி நடைமுறைக்கு கொண்டு வர, மக்களும், இதரவளங்களும் தேவை. காந்திஜியின் சிந்தனைகளையும், கொள்கைகளையும் இன்றும் சுவீகரிக்கும் மக்களுக்கு பஞ்சம் இல்லை. அதில் சிலர் இத்தனை வருடங்களாக இந்த நிறுவனத்தைப் பராமரித்து தற்போதைய வடிவத்துக்கு கொண்டு வந்துள்ளனர்.

தக்கார் பாபா வித்யாலயாவை, தலைவர் திரு. பாண்டியன், செயலாளர் திரு. மாருதி, பொருளாளர் திரு. கனக சபாபதி, புரவலர் (காப்பாளர்) திரு. ஸ்தானுநாதன் ஆகியோரைக் கொண்ட குழு தற்போது நிர்வகித்து வருகிறது. இவர்களோடு, கல்வியாளர்கள், வழக்கறிஞர்கள், பொதுபணியாளர்கள், தணிக்கையாளர்கள்குழு, மற்றும் காந்தியின் கொள்கைகளைச் சார்ந்து வாழும் நல்உள்ளங்கள் தம்மை அர்ப்பணித்து ஆதரவு அளிக்கின்றனர். அவர்களுக்கு நன்றி உரித்தாகுக. தக்கர் பாபா வித்யாலயா, தன் செய்கைகளின் மூலம் காந்தியின் கொள்கை வழி நடந்து, சென்னையின் தலைச்சிறந்த முதன்மை நிறுவனமாக இன்று நிமிர்ந்து நிற்கிறது.